அகுரண பிரதேச சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அகுரண பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.
இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அகுரண பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

-

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 03 சந்தர்ப்பங்களில் சபை கட்டிட அபிவிருத்திக் கு செலவிடப்பட்டிருந்த ரூபா 345,000 ஆன பெறுமதி மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலையான சொத்துக்கள் அபிவிருத்திக்கு செலவிடப்பட்ட பணம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | எவ்வித அபிவிருத்தி உடன்படிக்கை மேற்கொள்ளப் படாமலும் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்படாத ரூபா 1,903,800 பெறுமதியான செயற்திட்ட நிர்மாண கடன் கொடுத்தோராக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் அக்கணக்கு மற்றும் மூலதன செலவினக் கணக்கு கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது.. | 2021 ஆம் ஆண்டின் போது சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிறைவேற்றப்படாத அல்லது உடன்படிக்கை மேற்கொள்ளப்படாத செயற்திட்டங்களின் பெறுமதி மூலதமாக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரூபா 2,683,000 மதிப்பீட்டுப் பெறுமதியான அம்பலவத்த காணியின் நிர்மாணிக்கப்பட்ட 5 அறைகளை கட்டிடங்களில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இக்காணியில் அமைந்துள்ள ஆயுர்வேத கட்டிடம் மற்றும் சுகாதார நிலைய கட்டிடங்கள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரித்து தீர்வையானதன் பின்னர் இக்காணியின் பெறுமதியை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சபைக்குச் சொந்தமான சகல கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டுமென |

**1.6.2. இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 229,694,470 கூட்டுத்தொகையான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 23 மற்றும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற ரூபா 229,586,239 ஆன மீதிகளுக்கும் இடையே 325,713 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சரியான நாட்குறிப்புகள் மூலம் கணக்குகளை சீராக்க நடவடிக்கை எடுப்பதாக | வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 52 ஆம் பிரிவு | 2020 ஆம் ஆண்டின் செப்தம்பர் 15 ஆந் திகதி வரை அறிக்கை யிடப்பட்டிருந்த 25 அத்துமீறிய நிர்மாணங்களில் 10 அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக மாத்திரம் சபையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | அனைத்து அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் 2013 யூலை 31 ஆந் திகதிய 07 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2020 ஆம் ஆண்டு வரை பிரதேச சபையினால் முச்சக்கர வண்டி நிறுத்து மிடங்களில் 570 முச்சக்கர வண்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,543,000 ஆன நிலுவை வருடாந்த கட்டணங்கள் அறவிட வேண்டியிருந்தது. | வருடாந்த கட்டணமாக ரூபா 514,000 அறவிடப்பட்டுள்ளதாக | பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து முச்சக்கர வண்டிகளில் இருந்து கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக |
| (இ | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பின்னிணைப்பு ''அ'' இன் 1.4 ஆம் பந்தி | சபைக்கு 2020 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரை கிடைத்திருந்த 64 பொது மக்கள் முறைப்பாடுகளில் 15 தொடர்பாக சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | கொவிட் ஆபத்து நிலைமையின் பேரில் வெளிக்கள பரிசோதனைகளை மேற்கொள்வதில் தாமதத்தின் பேரில் இந்நிலைமை உருவாகியிருந்ததாக | சபைக்கு கிடைக்கும் பொது மக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,626,331 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,384,678 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இரண்டு நிறுவனங்களிடமிருந்து சட்டரீதியாக தயாரிக்கப்பட்ட | சுற்றுலா சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட ஆண்டறிக்கை யின் பிரதிகள் மற்றும் | செயற்திட்ட உண்மையான நிதிக்கூற்றுக்களை பெற்றுக்கொள்வதற்கும் அவை |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றுலா சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்று தொகுதிக்கு பதிலாக போலியாக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பேரில் முறையே ரூபா 206,225 மற்றும் ரூபா 9,648 தொகை வரியாக அறவிடப்பட்டிருந்தது. | சுற்றுலா சபைக்கு சமர்ப்பித்த வருடாந்த கணக்கறிக்கைகள் உறுதிப்படுத்தி தருமாறு கோரப்பட்ட போதும் அவ்வறிக்கைகள் உறுதிப்படுத்தப்பட் வழங்காமையால் குறித்த நிறுவனங்கள் பிரதேச சபைக்கு வழங்கிய நிதிக்கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு 1 சதவீத வரியை அறவிடுவதற்கு நடவடிக்கைக் எடுக்கப்படுமென | உண்மையானதென உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்து சரியான வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென |
| (ஆ) | சபையினால் அபிவிருத்தி செயற்பாடுகளின் போது அதற்குரிய சரியான செயற்திறனான உள்ளவாறான ஆய்வொன்று மேற்கொள்ளாததன் பேரில் வெவ்வேறு தரப்பினரால் தொடரப்பட்டிருந்த 09 வழக்கு செயற்பாடுகளுக்காக 2004 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 414,650 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நீதிமன்ற செயற்பாடுகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. | சட்டங்கள், விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் செயற்திறனான சாத்தியவள ஆய்வு மூலம் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1991 திசெம்பர் 04 ஆந் திகதி தனியார் தரப்பினரால் வழங்கப்பட்ட காணியில் சட்டரீதியாக கையளிக்காமலும் திட்டத்தை அங்கீகரித்துக் கொள்ளாமலும் சுகாதார அமைச்சின் நிதி ஏற்பாட்டை செலவு செய்து ஆயுர்வேத கட்டிடமொன்றையும் ரூபா 2,683,000 மதிப்பீட்டு பெறுமதியுடைய 5 கடைகளையும் சபையால் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | முறையான கையேற்றலொன்று மேற்கொள்ளபடவில்லைெயன்பதை ஏற்றுக்கொள்வதாக | சட்டரீதியாக காணியை பொறுப்பேற்று மற்றும் திட்டங்களை அங்கீகரித்து நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 84 ஆக இருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினரைப் பரீட்சித்த போது 02 ஊழியர்கள் மிகையாகவும் 25 ஊழியர்கள் பற்றாக்குறையாக இருந்ததுடன் அச்சிக்கலை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடமாக உள்ள பதவிகள் இரண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் ஆட்சேர்ப்ப செய்ய வேண்டிய ஏனைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் மிகை ஊழியர்கள் உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தில் நியமனம் பெற்றவர்களாக இருந்த்தாகவும் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் மிகை ஊழியர்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |